### சேலம் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து

# பொதுமக்களின் வசதிக்காக பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவைகள்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் துவக்கி வைத்து பேச்சு!

சேலம், ஏப். 12 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டம் சார்பில் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 06.04.2025 அன்று பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலை யில் தொடங்கி வைத்தார்கள். பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்குப் பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சேலம் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து பச்சமலை வழித்தடத்தில் இயங்கிய பேருந்தை டாப்செங்காட்டுப்பட்டியிலிருந்து உப்பிலியாபுரம் வரை கூடுதலாக 2 நடைகளும், சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து ஓமலூர் வழியாக தொளசம்பட்டிக்கு இயக்கப்படும் பேருந்து வாளதாசம்பட்டி வரை கூடுதலாக 2 நடைகள் வழித்தட நீட்டிப்பு செய்தும் இயக்கிடும் வகையில் இன்றைய தினம்



தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பச்சமலை பகுதியில் உள்ள பொதுமக்கள் டாப்செங்காட்டுப்பட்டியிலிருந்து உப்பிலியாபுரம் வரையிலும், சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து ஓமலூர், தொளசம்பட்டிக்கு இயக்கப்படும் பேருந்து வாளதாசம்பட்டி வரையிலும் பேருந்து சேவையினை நீட்டிப்பு செய்து தர வேண்டுமென கோரியிருந்தனர். அதனையடுத்து இன்றையதினம் மேற்கண்ட வழித்தடங்களில் பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடசேவைகள் அமைத்து தரவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென போக்குவரத்து துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில் சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் எஸ். ஜோசப் டயஸ், பொது மேலாளர் பா.கோபாலகிருஷ்ணன், சேலம் மேற்கு வட்டாட்சியர் ம.மனோகரன் மற்றும் தொ.மு.ச. நிர்வாகிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### கழக அரசில்

# 24 தொழில்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம்!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் சி.வி.கணேசன் விளக்கம்!

**சென்னை, ஏப். 12 -**

**கழக அரசில் - 24 தொழில்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என, சட்டப் பேரவையில் விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் கூறியதாவது:

‘சாம்சங்’ நிறுவனத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர், எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், தா.மோ. அன்பரசன், தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகிய நாங்கள் அனைவரும் கலந்துபேசி, முதலமைச்சர் அவர்களின் உத்தரவை ஏற்று, தலைமைச்



செயலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தி, சுமூகமான தீர்வை மிகச் சிறப்பாக Samsung நிறுவன தொழிலாளர்களுக்கு பெற்றுத் தந்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், Samsung நிறுவனத்தினுடைய சங்கம் பதிவு செய்வதை, முதலமைச்சர் அவர்களின் உத்தரவை ஏற்று, அந்தச் சங்கத்தைப் பதிவு செய்து தந்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். 24 தொழில்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு கோரிக்கைகளான பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் சம்பளம் கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு கழிப்பிட வசதி மற்றும் ஓய்வு வசதி போன்றவற்றைச் சொல்லியிருக்கிறீர்கள். முதல் முதலில் இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், பெண்கள், அதாவது கடை நிறுவனங்கள், உணவு விடுதியாக இருக்கட்டும், நகைக் கடையாக இருக்கட்டும், துணிக் கடையாக இருக்கட்டும், வணிக நிறுவனங்களாக இருக்கட்டும் எந்த நிறுவனங்களாக இருந்தாலும் பணியில்லாத நேரத்தில் பெண்கள், மற்றவர்களெல்லாம் இருக்கையில் அமரலாம் என்று இருக்கை வசதி ஏற்படுத்திக் கொடுத்த மாநிலம் தமிழ்நாடு, அது தளபதி அவர்களினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் விளக்கமளித்தார்.

---

### மகாராஜ சமுத்திரத்தில் குடியிருக்கும் மக்களுக்கு – அரசு நீதிமன்றம் மூலம் பாதுகாப்பு வழங்கிட வேண்டும்!

# பட்டுக்கோட்டையில் - கூட்டுறவுத் துறை சார்பில் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிடுவீர்!

## சட்டப்பேரவையில் கா. அண்ணாதுரை பேச்சு!

**சென்னை, ஏப்.12-**

**சட்டப்பேரவையில், கூட்டுறவு மற்றும் மானியக் கோரிகைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பட்டுக்கோட்டை தொகுதி கழக உறுப்பினர் கா. அண்ணாதுரை; “மகாராஜ சமுத்திரத்தில் குடியிருக்கும் மக்களுக்கு நீதிமன்றம் மூலம் அரசு பாதுகாப்பு வழங்கிட வேண்டும்” என்றும் - “பட்டுக்கோட்டையில் கூட்டுறவுத் துறை சார்பில் கலை - அறிவியல் கல்லூர் தொடங்கிட வேண்டும்” என்றும் வேண்டுகோள்விடுத்தார்.**

‘‘சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

நூற்றாண்டு வரலாறு கண்ட இந்த சிறப்புமிக்க அவையில் உரையாற்றுகின்ற நேரத்தில், அறிவாசான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நெஞ்சம் நிறைந்த கலைஞர் ஆகிய மகத்தான, நமக்கு அடையாளம் தந்த தலைவர்களை நெஞ்சிலே ஏந்தி, தடம் மாறாமல் எப்படிப்பட்ட இழப்பு ஏற்பட்டாலும், கொண்ட கொள்கையில் மாற்றம் அல்லது சமரசம் என்கிற பேச்சுக்கே இடமில்லாமல் கொள்கை வழியில் நம்மைத் தயார்படுத்தி, வழி நடத்துகின்ற நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் தலைவர் முதல்வர் அவர்களுக்கும், இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை தலைவர் துணை முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், கொறடா, துணைத் தலைவர், அவை உறுப்பினர்கள் மற்றும் பட்டுக்கோட்டை தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மானியக் கோரிக்கையில் நான் உரையாற்றுவதற்கு முன்பு, இன்றைக்கு பட்டுக்கோட்டை பகுதியில் நிலவும் ஒரு பதற்றமான சூழ்நிலை குறித்தும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பட்டுக்கோட்டை நகரில் மூன்றில் ஒரு பங்கு உள்ளது மகாராஜசமுத்திரம் என்ற வருவாய் கிராமம். இது பட்டுக்கோட்டை நகர வார்டுகளில் சுமார் 6 வார்டுகளை உள்ளடக்கியது. இந்தப் பகுதி சுமார் 2,479 ஏக்கர் நிலப்பரப்பு கொண்டது.

இதில் சுமார் 9,300க்கும் மேற்பட்ட மக்கள் குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தப் பகுதி முழுமைக்கும் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த மறைந்த நாகோஜி ராமசந்திர காட்கே ராவ் என்பவரின் வளர்ப்பு மகன் ஆனந்தகுமார் என்பவர் உரிமை கொண்டாடுகிறார். இவர் தஞ்சையை ஆண்ட மன்னர் பரம்பரையின் வாரிசு என்றுக் கூறிக்கொண்டு, மாதுஶ்ரீ அக்குபாய் அம்மணி சத்திரத்திற்கு சொந்தமான இந்த சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லிக்கொள்கிறார்.

அந்தச் சொத்துக்கள் பொறுத்து தற்போது வசிப்பவர்கள் யாரையும் வழக்கில் சேர்க்காமல் இறந்து போனவர்களையும், ஊரை விட்டு வெளியேறியவர்களையும் வழக்கில் சேர்த்து ஒருதலைப்பட்சமான தீர்ப்பைப் பெற்று குடியிருப்பவர்களை வெளியேற்ற முயற்சிக்கிறார். வசிப்பவர்கள் அனைவரும், வில்லங்கமில்லா சான்றிதழ் பெற்று முறையான பட்டாக்களைப் பெற்று முறையாக அரசுக்கு வரி செலுத்தி வருகிறார்கள்.

எனவே, இதுகுறித்து முதல்வர் அவர்கள் கவனத்திற்கும், வருவாய் துறை அமைச்சர் அவர்களுடைய



கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் இது குறித்த அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். எனவே, அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு இதில் வசிப்பவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளில் துணை நிற்பதோடு, உரிய பாதுகாப்பு வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அவையில் நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற இரண்டு மானியக் கோரிக்கைகளும், மக்களோடு மிகுந்த தொடர்பு கொண்ட முக்கியத் துறைகளாகும்.

“உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே”

என்று மணிமேகலையும்,

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”

என்று வள்ளுவரும்,

“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்.

என்று பாரதியும் உணவின் முக்கியத்துவம் பற்றிக் கூறினார்கள்.

இப்படி சிறப்பு வாய்ந்த உணவுத் துறையில், உணவுத் துறையால்தான் இந்தியாவில் முதன் முதலில் “தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்” என்கின்ற நிறுவனத்தை உருவாக்கி, தமிழகத்திற்கு இருக்கக்கூடிய குடும்பங்களைக் கணக்கெடுத்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்ப அட்டை வழங்கி, அனைத்துத் தரப்பட்ட மக்களும் பசியால், பட்டினியால் வாடக் கூடாது என அரிசி உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களும் தரமாகவும், முறையாகவும் அனைவருக்கும் வழங்கியவர்தான் நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

மேலும், விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை அரசே, கொள்முதல் செய்ய வேண்டும் என்று அறிவித்து “நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை” உருவாக்கித் தந்தவர்தான் நம்முடைய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள். இதன்மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலையும், விலை உத்திரவாதமும் கிடைத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி”

என்றார் வள்ளுவர்.

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். ஆகவே, பொருள் உடையவருக்கு அதைச் சேமித்து வைக்கக் கூடிய இடமாகும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஒப்பதான் குறளோவியம் தந்த கலைஞர் நேரடி நெல் கொள்முதல் நிலையம்மூலம் நெல்லைக் கொள்முதல் செய்து அதை ஏழை, எளியவர்களுக்கு வழங்கி பட்டினியால் வாடுபவர்கள் தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்கினார்கள்.

மேலும், கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டவாறு தமிழகத்தில் மொத்தம் 731 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்களாக உள்ளன என்ற உணவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு டெல்டா மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, ஒவ்வொரு ஆண்டும், 50 நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பும், எதிர்காலத்தில் இயற்கைச் சீற்றங்களிலிருந்து விவசாயி விளைவித்த நெல்லை முழுமையாக பாதுகாக்க முடியும் என்பதும் வரவேற்கத்தக்க முடிவாகும்.

மேலும், விவசாயிகளிடமிருந்து சரியான எடையில், அதிக அளவில் விரைவாக நெல் கொள்முதல் செய்ய “அதிகத்திறன் கொண்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (Mega DPC) அமைக்கப்படும் என்ற அறிவிப்பும், சோதனை முறையில் முதன் முதலாக அந்த DPC தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பஞ்சநதிக்கோட்டை என்ற ஊராட்சியில், கடந்த 29.3.2025 அன்று உணவுத் துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டதற்கு, மாவட்ட விவசாயிகளின் சார்பில் அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட இந்த Mega DPC மையங்களை எதிர்காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக திறப்பதற்கு அமைச்சர் ஆவன செய்திட வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து மிக முக்கிய துறையான கூட்டுறவு மானியக் கோரிக்கையில் உரையாற்றுகின்ற இந்த 2025 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச கூட்டுறவு ஆண்டாக அறிவித்து, கூட்டுறவு அமைப்புகளின் முக்கியத்துவத்தை உலகறிய செய்துள்ளது. எனவே, இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் என்னுடைய இதய வாழ்த்துக்களை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1904 ஆம் ஆண்டு இயற்றப்பட்டவுடன், நாட்டின் முதல் கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாட்டில் திரு வள்ளூர் மாவட்டத்திலுள்ள திரூரில் தொடங்கப்பட்டது என்றும், அதைத் தொடர்ந்து பல்வேறு நோக்கங்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டன என்பதையும் நம்மால் அறிய முடிகிறது.

‘கூட்டுறவே நாட்டுயர்வு’ என்பதற்கேற்ப தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கீழ்க்கண்ட பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: அவை, கூட்டுறவுக் கடன் சங்கங்கள்; வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்; நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்; சிறப்பு நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்; தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்மூலம் நடத்தப்படும் உறுப்பினர் கல்வி, பணியாளர் பயிற்சி, பொது விழிப்பணர்வு மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவையாகும்.

இந்தக் கூட்டுறவு நிறுவனங்களின் சேவைகள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணைப்புச் சங்கங்களாக கடந்த ஆண்டு நஷ்டத்தில் செயல்பட்டு வந்த சுமார் 2,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நம்முடைய துறை எடுத்த நடவடிக்கைகள் விளைவாக, 950 ஆகக் குறைந்துள்ளன; இன்றைக்கு அந்தக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுடைய கடன் சுமை குறைந்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டு இறுதிக்குள் அனைத்து கூட்டுறவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும் இலாபம் ஈட்டும் சங்கங்களாக மாற்றப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மேலும் ஒரு செய்தியை கொண்டுவர விரும்புகிறேன். பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பட்டுக்கோட்டை நகராட்சியில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் பட்டுக்கோட்டை கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் NCVT அங்கீகாரத்துடன் நான்கு தொழிற்பிரிவுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், புதியதாக, பிட்டர், வெல்டர், மோட்டார் மெக்கானிக்கல், ஏ.சி. மெக்கானிக் ஆகிய நான்கு தொழிற்பிரிவு பாடங்கள் துவங்குவதற்கு 60 சதவிகித ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது அறையிலே வைக்கப்பட்டுள்ளன.

அவை தற்போது பயன்பாட்டில் இல்லாத நிலையில் இருப்பதால், மீதமுள்ள 40 சதவிகித உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, இந்த நான்கு பிரிவுகளிலும் பயிற்சிகள் துவங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்தத் தொழிற் பயிற்சிக் கூடம் இருக்கிற இடம் என்பது சுமார் 5 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். கடந்த நம்முடைய ஆட்சியில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் கூட்டுறவுத் துறையின் சார்பில் ஒரு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு, அது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதேபோன்று போதுமான இடம் கூட்டுறவுத் துறையிடம் இருக்கின்ற காரணத்தால், தற்போது பட்டுக்கோட்டை தொகுதியில் அரசுக் கல்லூரிகள் இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் அங்கு அரசின் சார்பில் ஒரு பெண்கள் கலைக் கல்லூரி தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அமைச்சர் அவர்களுக்கு பட்டுக்கோட்டையைப் பற்றி நன்றாகத் தெரியும். எனவே, ஒரு புது முயற்சியாக எங்களுக்கும் அது போன்ற ஒரு வாய்ப்பைத் தர வேண்டும் என்று கேட்டு, என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைளை நான் தருகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

பட்டுக்கோட்டை தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கு அரசு ஆவன செய்திட வேண்டும். பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினம் நகரம் மற்றும் மதுக்கூர் பேரூராட்சியை தலைமையிடமாக கொண்டு இரண்டு புதிய வட்டங்களை உருவாக்கித் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை நகரத்தில் மூன்றாம் கட்ட புறவழிச்சாலை அமைத்து தர வேண்டும். அதிராம்பட்டினம் நகராட்சிக்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். மதுக்கூர் பேரூராட்சிக்கு புதிய பயணிகள் விடுதி கட்டித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டுக்கோட்டை தொகுதி, தம்பிக்கோட்டை வடகாடு, புதுக்கோட்டை உள்ளூர், கீழக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு அனுமதி வழங்கிட வேண்டும். மதுக்கூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி தர அரசு ஆவன செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

---


### கன்னியாகுமரி கிழக்கு - மேற்கு மாவட்டங்களில் பொறியாளர் அணி

## பகுதி / ஒன்றிய / நகர /பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

### மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர், நாகர்கோவில் மேயர் மகேஷ் தலைமையில் நடைபெறும் நேர்காணலில் பொறியாளர் அணிக்கு கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு மாவட்டங்களில் பகுதி / ஒன்றிய / நகர / பேரூர் / அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - இன்று 13.4.2025, நேரம் மதியம் 2:00 மணிக்கு, இடம் - மாவட்ட தி.மு.க.அலுவலகம், நாகர்கோவில்

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம் - இன்று 13.4.2025, நேரம் மாலை 6:00 மணிக்கு, இடம் - மாவட்ட தி.மு.க.அலுவலகம், அழகிய மண்டபம்.

**எஸ்.கே.பி. கருணா**
மாநில செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி


---

# அமித்ஷாவிற்கு எதிராக காங்கிரஸ் கருப்புக் கொடி!

சென்னை, ஏப். 12-

சென்னை வந்துள்ள ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு எதிராக, காங்கிரஸ் கட்சியினர் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழ்நாடு அரசுக்கு, நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனங்கள் எழுந்து வருகின்றன. நீட் திணிப்பு, இந்தி திணிப்பு, நிதி வழங்காமை உள்ளிட்ட தமிழ் மக்களை வஞ்சிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், தமிழ்நாடு வந்துள்ள ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு எதிராக, சென்னை மயிலாப்பூரில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில், கருப்புக் கொடி ஏந்தி கண்டன போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தமிழ்நாட்டின் நலன்களுக்கு விரோதமாக செயல்பட்டு வருவதாக குற்றம்சாட்டியதுடன், கண்டன முழக்கம் எழுப்பினர்.



குவைத் நாட்டில் தி.மு.க. அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில் மாநில உரிமைகளுக்கான சட்டப் போராட்டத்தில் மாபெரும் வெற்றிக் கனியை பறித்து தந்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழாவும், இந்த வெற்றியை கொண்டாடும் விதத்தில் இனிப்புகள் வழங்கி வெற்றி கொண்டாட்டமும் தி.மு.க. அயலக அணி குவைத் மண்டலத்தின் சார்பாக சிறப்பாக கொண்டாடப்பட்டது.